1979 மார்ச் 14]

புயல் போன்ற இயற்கை உற்பாதங்கள் ஏற்படும்போது விவசாயிகள் தவிர மற்றத் துறையில் இருப்பவர்கள் நிவாரண உதவிகள் பெற முடிகிறது. விவசாயிகளுக்கு இந்த உற்பாதங்களால் ஏற்பட்ட சங்கடங்களை நிவர்த்தி செய்யும் வகையில் 1977-78-ம் ஆண்டு வரை விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களை வஜா செய்யவும் அதற்குப் பிறகு வாங்கிய கடன்களை நீண்ட காலக் கடன்களாக மாற்றவும் அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : 16-12-78-ம் நாளில் இருந்து எந்த விவசாயிகளின் மீதும் ஜப்தி நடவடிக்கை கூடாது என்றும் இந்நிலை இன்று வரை தொடருகிறது என்றும் விவசாயிகள் உச்ச மட்டக்குழு பரிந்துரை வரும் வரை ஜப்தி நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளாது என்றும் உங்கள் மூலம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கான்சாபுரத்திலுள்ள கூட்டுறவு நாணய சங்கம்

*வினா எண் 383—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி கான்சாபுரம் பஞ்சாயத்து மன்ற பகுதியில் உள்ள கூட்டுறவு நாணய சங்கத்தில் பணம் கையாடல் நடைபெற்றுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) முகவை மாவட்டத்தைச் சேர்ந்த திருவில்லிபுத்தூர் தொகுதி கான்சாபுரம் பஞ்சாயத்து மன்றப் பகுதியில் உள்ள கூட்டுறவு நாணய சங்கத்தில் பணம் கையாடல் நடை பெற்றுள்ளது உண்மை.

(ஆ) இது பற்றி காவல் துறையின் ஒரு முழுமையான புலனாய்வுக்கு அனுப்பப்படவிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட தலைவர் ஒரு வக்கீலாக இருக்கிறார். இவர் கையாடல் பண்ணியிருக்கிறார். கூட்டுறவு அதிகாரிகள் நான்கு வருஷங்களுக்கு முன்னால் ஒப்புதல் கொடுத்து முறைப்படி ஏ. பி. பி. அனுமதி வழங்கி வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர்

வக்கீலாக இருக்கும் காரணத்தால் சம்பந்தப்பட்ட ஏ. பி. பி.யை சரிக்கட்டிக் கொள்கிறார். மேலும் சொந்தம் முறை கொண்டாடி வழக்கு தொடர முடியாத நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார். ஆகையால் சம்பந்தப்பட்ட இந்த கேசில் அமைச்சர் அவர்கள் நேரடியாகக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா? எவ்வளவு தொகை கையாடல் செய்யப்பட்டது? யார் யார் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாகப் பணம் முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் என்று இன்றைய தினம் கூட்டுறவுச் சங்கத்தினுடைய 65-வது பிரிவின்கீழ் விசாரணை செய்யப்பட்டு இன்றையதினம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பவர்கள் 5 பேர். 1. திரு. கே. ராமசாமி, முன்னாள் செயலாளர்; 2. திரு. டி. கதிரேசன். பி. எஸ். சி., பி. எல்., சங்கத் தலைவர். 3. திரு. கே. முத்தையா, சங்கத்தின் முன்னாள் இயக்குநர், 4. திரு. பால் பாண்டியன், முன்னாள் சரக மேற்பார்வையாளர், 5. திரு. என். சுப்பிரமணியம், அனுமதிக்கப்பட்ட முன்னாள் எழுத்தர், சங்கத்தின் செயலாளர்.

இவர்கள் ஐந்து பேர் மீதும் இன்றையதினம் 65-வது பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டு அவர்கள் ஏறத்தாழ 3171 ரூபாய் கையாடல் செய்திருக்கிறார்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது மேலும் அவர்கள் மீது கிரிமினல் குற்றங்கள் இருக்கின்றனவா, இருந்தால் எப்படி மேல் நடவடிக்கை எடுப்பது என்பதற்காக உயர்நீதி மன்ற அரசு வழக்குரைஞரைக் கலந்து ஆலோசித்து காவல் துறையினரின் முழுமையான புலனாய்வுக்குப் பிறகு மீண்டும் இவைகளில் மேல் நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: அந்தக் கூட்டுறவு விவசாய நாணயச் சங்கம் இப்போது செயல்படாத நிலை இருக்கிறது. அவர் லட்சக் கணக்கில் கையாடல் செய்து பினாமி பெயரில் சொத்துக்கள் வாங்கி வைத்திருக்கிறார். அந்தச் சொத்துக்களை ஜப்தி செய்யவும், கூட்டுறவுச் சங்கத்தைச் செயல்படுத்தவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை மனதில் வைத்துக்கொண்டு தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.